# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வணிகமாணிக் கற்கைநெறிக்கான அனுமதி - 2022 / 2023 (அணி - VIII)

மேற்படி வணிகமாணிக் கற்கைநெறிக்கு கல்வியாண்டு 2022/2023 மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் பிரகாரம், **தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விபரம்** இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம் (இணைப்பு - 1)
- புகைப்பட உறுதிப்படுத்தல் படிவம் (இணைப்பு - 11) **(3.0 cm x 3.5 cm, White Background)**
- மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டு (மூலப்பிரதி)
- கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
  - கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்
  - கா.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- திருமணச்சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- தேசிய அடையாளஅட்டை (புகைப்படப்பிரதி)
- ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் (NVQ தகைமையின் பெறுபேற்று அட்டவணை)

**கற்கைநெறிக் கட்டணம் தொடர்பான விபரம்**

| வருடம் | கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலம் | தவணைக் கட்டணம் |
|---|---|---|
| 1ம் அரையாண்டு | பதிவின் போது வங்கியில் வைப்பு செய்திருக்க வேண்டும் | ரூபா. **70,000.00** |
| 3ம் அரையாண்டு | மூன்றாம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா. **50,000.00** |
| 4ம் அரையாண்டு | நான்காம்அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா. **50,000.00** |
| 5ம் அரையாண்டு | ஐந்தாம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா. **50,000.00** |
| **மொத்தக் கட்டணம்** | | ரூபா. **220,000.00** |

- 1ம் வருட கட்டணமாகிய ரூபா.70,000.00 இனை பதிவு செய்யும் போது செலுத்த வேண்டும்.
- ஏனைய கட்டணங்கள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் ஆரம்பத்திலும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பதிவினை மேற்கொள்வதற்காக 21.12.2024 மற்றும் 22.12.2024 ம் திகதிகளில் நேரில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமூகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது, என்பதனையும் தாங்கள் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு :** மேற்படி கற்கைநெறிக்குரிய விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் முழுவதும் **தமிழ்மொழிமூலம்** இடம்பெறும்.

உதவிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.
09.12.2024